**2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள இலங்கை ஜனாதிபதி தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைளில் ஈடுபடுவதற்கான தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ள ANFREL அமைப்பு**

**2024 மார்ச் மாதம் 26 ஆம் திகதி.**

சுதந்திர தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL) இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆந் திகதியன்று நடாத்திய சந்திப்பின் போது இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தமது விருப்பத்தை தெரிவித்துள்ளது.

ஜனநாயக தேர்தல்களுக்கான சர்வதேச கோட்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் ANFREL அமைப்பு 2001 ஆண்டிலிருந்து இலங்கையில் நடாத்தப்பட்ட 12 தேர்தல்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ANFREL அமைப்பானது ஊக்குவிப்பு, ஆலோசனை, ஆற்றல் விருத்தி மற்றும் தேர்தல்கள் கண்காணிப்பு மூலம் ஜனநாயக தேர்தல்களை பாதுகாத்து முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமொரு பிராந்திய தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பாகும்.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி தேர்தல் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு குறையாத மற்றும் இரண்டு மாதத்திற்கு மேற்படாத காலப்பகுதியில் நடாத்தப்பட வேண்டும். அதன்படி தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பித்துள்ள காரணத்தினால் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஜனாதிபதி தேர்தலை நடாத்த வேண்டியது கட்டாயத் தேவையாகும்.

இலங்கையின் எதிர்கால தேர்தல்களில் நாம் எதிர்பார்க்கின்றவாறு, ஜனநாயக தேர்தல்களில் சர்வதேச தரப் பண்புகளை பாதுகாப்பதற்கு முக்கிய பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, அதன்போது சகல தரப்புகளுக்கும் பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

ANFREL அமைப்பு இலங்கையில் இதற்கு முன்னர் பங்கெடுத்த தேர்தல் நடவடிக்கைகளின் போது தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்கு விதிகள், வெறுப்பு பேச்சுகள் மற்றும் தவறானதும் பொய்யானதுமான தகவல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தல் மற்றும் புலம்பெயர்

தொழிலாளர்களுக்கு வாக்குரிமையை உறுதி செய்தல் உள்ளிட்ட அடிப்படை தேர்தல் மறுசீரமைப்புகளின் தேவைகளை தொடர்ந்து வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிதி பிரச்சார செலவுகளை ஒழுங்குபடுத்துவதோடு தேர்தல் வேட்பாளர்களுக்களுடையே சம அளவிலான போட்டிக் களமொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் தேர்தல்கள் செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமூலத்தை ANFREL அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மேற்படி சட்டங்களை செயற்படுத்தும் விதம் தொடர்பாக கண்காணிப்பதற்கும் அதன் மூலம் தேர்தல்கள் நடவடிக்கைகளின் கண்ணியத்தை வலுவூட்டுவதற்கும் பணத்தை அடிப்படையாகக் கொண்ட பாதகமான அரசியல் அழுத்தங்களை குறைப்பதற்கும் ANFREL அமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு செயற்பட்டு வருகின்றது

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் சர்வதேச தளங்களுக்குமிடையே தொடர் ஒத்துழைப்பை பேணுவதன் மூலம், வெறுப்பு பேச்சுகளும் தவறானதும் பொய்யானதுமான தகவல்கள் தேர்தல் காலப்பகுதியில் இணையத்தின் ஊடாக பரப்பப்படுவதால் ஏற்படக்கூடிய தாக்கத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ANFREL அமைப்பு பரிந்துரைக்கின்றது. தேர்தல் காலப்பகுதியில் தகவல் கட்டமைப்பை மாசுபடுத்தும் தகவல் பரிமாற்றம் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு காணப்படும் இதர வாய்ப்புகள் தொடர்பாக ANFREL அமைப்பு ஆராய்ந்து வருகின்றது.

ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ள போதிலும், வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு, குறிப்பாக புலம்பெயர் ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்கு இது வரை வசதி செய்துக்கொடுக்கப்படவில்லை. அவர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தி அவர்களுக்கு நாட்டுக்கு வெளியே வாக்களிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியது முக்கிய தேவையாகும். தமது சொந்த தொகுதிக்கு வெளியே இருக்கும் வாக்காளர்கள் மற்றும் தேர்தல் தினத்தன்று பணியிலுள்ள வாக்காளர்களுக்கும் முன் தேர்தல் பொறிமுறையை விரிவாக்க வேண்டியுள்ளது.

இறுதி விடயமாக, உள்ளூராட்சி மன்ற தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தலின் நீண்ட தாமதமானது, உரிய நேரத்துக்கு தேர்தல்களை நடாத்துவதற்கு அரசாங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு தொடர்பாக கவலையை ஏற்படுத்துகின்றது. உரிய நேரத்தில் ஜனாதிபதி

தேர்தலை ஏற்பாடு செய்வதற்கு போதுமானளவு வளங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்குமாறு ANFREL அமைப்பு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்டு அங்கீகரிக்கப்படாதுள்ள மனித உரிமைகள் தொடர்பான கர்வதேச பிரகடனம் (UNDHR) மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) கீழ் முறையாகவும் உரிய நேரத்திலும் தேர்தல்களை நடாத்த வேண்டியது சர்வதேசமே அங்கீகரித்ததொரு மனித உரிமை ஆகும். இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்களுக்குட்பட்டு, அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு ஜனாதிபதி தேர்தலை போன்றே தாமĵமாகியுள்ள தேர்தல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை வேண்டியதும் இன்றியமையாத தேவைகளாகும்.

ANFREL அமைப்பு பேங்காக் நகரை தலைமையகமாக கொண்டு இயங்குமொரு சர்வதேச தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பு என்பதோடு, அது தேர்தல்கள் கண்காணிப்பு, உள்நாட்டு கண்காணிப்பாளர் ஆற்றல்களை மேம்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை வழங்குவதன் மூலம் ஆசியாவின் ஜனயாகத்தை உறுதிப்படுத்தல், ஊக்குவித்தல் மற்றும் வலுவூட்டுவதை நோக்கமாக கொண்டு 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. கடந்த 27 ஆண்டுகளில் மியன்மார், தாய்லாந்து, இந்தோனிசியா மற்றும் இலங்கை போன்ற நிலைமாற்று ஜனநாயக காலப்பகுதியில் உள்ள நாடுகளின் பிரதான தேர்தல்கள் உள்ளிட்ட ஆசியா முழுவதுமாக நாம் 75 தேர்தல்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

மேலதிக தகவல்களுக்கு

சாந்தனி வட்டவல, நிறைவேற்றுப் பணிப்பாளர், ANFREL அமைப்பு
chandanie@anfrel.org, +666317543221